**வவுனியா மாநகர சபை - 2023**

**----------------------------------------**

வவுனியா மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகள் தொடர்பாக மாநகர சபைக்கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 முதல் 220 ஆம் பிரிவுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் மாநகர சபைக்கட்டளைச் சட்டத்திலுள்ள (252 ஆம் அத்தியாயம்) ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகள் மாத்திரமே இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனமும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2)ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் காட்டப்படும் வகையிலான கால வரையறைக்குள் அந்த நிறுவனங்களின் வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கைகளுடன், கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கூறிய சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் பிற நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்திற்குள் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டியதுடன், இதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

## 1.3 வவுனியா மாநகர சபை ஸ்தாபித்தல் மற்றும் நிதிக்கூற்றுகள் தயாரித்தல்

2022 செப்தெம்பர் 06 ஆந் திகதிய 2296/05 இலக்கமுடைய அதிவிசேட வருத்தமானி அறிவித்தல் ஊடாக உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் 2023 மார்ச் 19 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் வவுனியா நகர சபை கலைக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆந் திகதியிலிருந்து வவுனியா மாநகர சபை ஸ்தபிக்கப்பட்டு அந்த தினம் உறுப்பினர்களின் பதவிக்காலம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியாக காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், மாநகர சபை கட்டளை சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் குறித்த உறுப்பினர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் சபை அத்தினத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக கருதப்பட வேண்டும். அவ்வாறு இருக்கும் போது மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(1) பிரிவின் பிரகாரம் மாநகர ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதும் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்தும் வவுனியா நகர சபை பெயரிலே நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் 2023 திசெம்பர் 31 இல் மாநகர சபையினால் சமர்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதிக்குள் தாயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 26.93 ஹெக்டெயர் காணிகளுக்கான காணி உரிமைப் பத்திரச் சான்றுகள் மற்றும் வரலாற்றுத் தாள்கள் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உரிமையற்ற காணிகள் தொடர்பில் தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | காணி உரிமைகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02 ஆண்டுகளுக்கும் மேலாக 13,484 குடியிருப்பாளர்களிடமிருந்து நிலுவையாக உள்ள ஆதன வரி மீதி ரூபா 23,162,586 ஆக இருந்ததுடன் 01 முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நிலுவையாக உள்ள குத்தகைகள் 1,312,094 ஆக காணப்பட்டது. | நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் ஊடாக ஆதன வரியினை அறவிடுவதற்கும் மற்றும் குத்தகை நிலுவையினை தவணை அடிப்படையில் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | செலுத்தப்படாத ஆதன வரி நிலுவைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 2023 மார்ச் 20 ஆந் திகதியிலிருந்து சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள வவுனியா மாநகர சபைக்கு இதுவரைக்கும் ஆணையாளர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செலவு மதிப்பீடுகளிற்கான அனுமதி கிடைக்கப்பெறாமையினால் ஆணையாளரை நியமிக்க முடியாதுள்ளது. | தேவையான அனுமதிகளைப் பெற்று மிக விரைவாக ஆணையாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான கலி பௌசர் (Gully Bowser) வாகனமொன்று விபத்திற்கு உள்ளானமை தொடர்பில் ரூபா 204,500 இழப்பு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 101 முதல் | வாகன பராமரிப்புச் செலவீனமாக தாக்கல் செய்யப்பட்டமையினால் அது நட்டமாக கருதப்படவில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 110 வரையான ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படாமல் சபையின் வாகன பராமரிப்புச் செலவீனமாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | 05 வருடங்களிற்கு ஒருமுறை மீள புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த 397 கடைகளுக்கான நீண்டகால வாடகை ஒப்பந்தமானது புதுப்பிக்கப்பட்டிருக்காது தொடர்ந்தும் கடந்த 06 தொடக்கம் 43 வருடங்களாக செயற்படுத்தப்பட்டிருந்தன. | வாடகை ஒப்பந்தங்களினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1589/20 ஆம் இலக்க 2009 பெப்ரவரி 19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம், வாடி வீட்டு நிர்வாகமானது உள்ளூராட்சி மன்றங்களுக்கே கையளித்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வவுனியா வாடி வீடானது இதுவரை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அத்துடன் 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான வாடிவீட்டு வாடகை நிலுவை ரூபா 2,229,222 தொகையும் அறவிடப்படமால் காணப்பட்டிருந்தது. | குறித்த விடயம் தொடர்பில் வழக்கு இடம்பெற்று வருகின்றமையினால் இவ்வழக்கின் தீர்ப்பின் பின்னரே தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | சபையின் ஆளுகைக்கு உட்படுத்துவதற்கும் மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,230,939 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வவுனியா குளம் சுற்றுலா மையமானது நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை 04 வருடங்களிற்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்படாமல் விளைவற்று காணப்பட்டிருந்து. | வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் குறித்த சுற்றுலா மையத்தினை பாவனைக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும். | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தனிநபர் ஒருவரினால் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டு தொழில் நிலையம் நடாத்தி வருகின்ற சபைக்கு சொந்தமான வைரவப்புளியங்குளத்திலுள்ள 7 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணி தொடரபாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியினை எல்லைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் குறித்த காணியினை மீளப்பெற்றுவது தொடர்பில் தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | காணி தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 27 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கான குடிபுகு சான்றிதழ் சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குடிபுகு சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | குடிபுகு சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 02 தொடக்கம் 21 வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படும் 09 உழவு இயந்திரங்களினை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது அப்புறப்படுத்துவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்து மீளப்பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 24 காணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளினை கையேற்பதற்கு தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் உரிமையினை தாமதமின்றி தீர்க்கப்படுதல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் காண்படும் ரூபா 112,228 ஆன பதவியினர் கடன் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியினர் கடன் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தாயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 07 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலும், 07 செலவின விடங்களில் 10 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையும் விலகல்களும் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் 52 சதவீதமான விலகலும் இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முன் கூட்டியே கணிக்க முடியாத எதிர்பாரா செலவீனங்கள் காரணமாக பாதீட்டின் செலவீனத்திற்கும் உண்மை செலவீனத்திற்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. | பாதீடு முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும், 2008 இன் 01 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2022 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் "ஆ" பிரிவின் பிரகாரம் விலங்கறுமனை மற்றும் திண்மக் கழிவு நிலையத்திற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |